For all Ceremonies
at your homes
Our Service available
OLI ILLAM
210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 2.00

தரப் பத்தர், எதிரொலி, சில்வர் கப், பீங்கான் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்
"ஒளி இலலம்"
210, பிரதான வீதி,
(யாழ்ப்பாண மருங்கில்)
யாழ்ப்பாணம்

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 03 திங்கட்கிழமை (19 09 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 296

புலிகளுடனான பூர்வாங்க பேச்சுக் குறித்து புதனன்று அமைச்சரவையில் ஆராய்வு

பிரதமர் தலைமையிலான செயலணிக் குழு இன்று கூடும்

கொழும்பு, செப்டெம்பர் 19

விடுதலைப் புலிகளுடனான பூர்வாங்கப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து நாளை மறுதினம் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது. அதற்கு முன்னோடியாக பிரதமர் தலைமையிலான செயலணிக் குழு இன்று கூடி நிலைமைகளை ஆராயவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்டிருக்கும் செயலணிக் குழுவே இன்று கூடவிருக்கின்றது.

அதன் பின்னர் நாளை மறுதினம் புதன்கிழமை அமைச்சரவை கூடும்.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் அரசு — விடுதலைப் புலிகள் பூர்வாங்கப் பேச்சுக்களான திகதி விவரங்கள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்துவதற்காக அரசு தரப்புப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. லயனல் பேர்னாண்டோ கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருவதற்கு முன்னர் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் பேச வேண்டிய விடயங்களில் ஒரு சில அம்சங்கள் குறித்தே அரசு தனக்கு விளக்கம் தந்திருப்பதாகவும் — மேலும் பல விடயங்களை தெளிவுபடுத்துவதற்காக

(4 ஆம் பக்கம் பார்க்க)

மணலாறில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், செப். 19

மணலாறுப் பகுதியில் கடந்த புதனன்று ஸ்ரீலங்கா விமானப் படையின் பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது

இருமிமமா செட்டி விமானங்கள் அப்பகுதியில் தாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

கடற்படையினர் தாக்குதல் வல்வைக் கடலில் மீனவர் பலி

கட்டுமரத்துடன் சடலம் மீட்பு

சுகவேட்டித்துறை, செப். 19

வல்வைக் கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் மீது நேற்று அதிகாலை 5 மணியளவில் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் மீனவர் ஒருவர் உடல் சிதறிப் பலியானார். அவரது சடலமும் மற்றும் கட்டுமரம் மீன்பிடி உபகரணங்கள் என்பனவும் கடலில் மூழ்கின மற்றொரு மீனவர் கடலில் குதித்து நீந்தி கரை சேர்ந்தார்.

காங்கேசன்துறைப் பகுதியில் இருந்து வடமராட்சி கிழக்குப் பகுதியை நோக்கிச் சென்ற கடற்படையினரே இத்தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது

இச்சம்பவத்தில் ஆலங்கேணி வடிவைச் சேர்ந்த ஸ்ரீகாந்த ராஜா கருணாகரன் (வயது 21) என்ற மீனவரே கொல்லப்பட்டவராவார் அதே

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்டத்துக்கு 'பாக்ஸ்' தொடர்பு வசதி

ஐந்து இடங்களில் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப் 19

யாழ். மாவட்டத்திற் தொலைத்தொடர்பு சேவைகளை சீராக்கும் வகையில் முதற்கட்டமாக ஐந்து 'பாக்ஸ்' கருவிகளை இங்கு அமைப்பதற்கு தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

யாழ் செயலகம், யாழ் ஆஸ்பத்திரி, பிரதம தபாலகம், பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் இவற்றைப் பொருத்துவது தொடர்பாக அமைச்சு ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முதலில் இந்த 'பாக்ஸ்' தொலைத் தொடர்பு கருவிகளை அமைக்கவும் — தொடர்ந்து தொலைபேசி வசதிகளை சீராக்கவும் — தொலைத் தொடர்பு அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-3)

இந்த ஆண்டில் இதுவரை 173 படையினர் உயிரிழப்பு

அரச தரப்பில் தகவல்

கொழும்பு, செப். 19

இந்த ஆண்டில் இதுவரை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் 173 ஆயுதப் படையினர் கொல்லப்பட்டனர். 461 படையினர் காயமடைந்தனர். மற்றும் 14 படையினரைக் காணவில்லை.

அதிகாரபூர்வ பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" நாளிதழ் இத் தகவலை வெளியிட்டிருக்கின்றது.

கடந்த ஒக்ஸ்ட் மாதத்தில் மிக மிக கூடுதலான எண்ணிக்கையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் ஊர்காவல் படையினரும் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. 24 இராணுவத்தினர் ஆக்மாதத்தில் மட்டும் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் 113 இராணுவச் சிப்பாய்கள், 8 — கடற்படைச் சிப்பாய்கள்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி மூளி

அமைச்சர் என்னதான் சொன்னாலும் பட்டாளம் விடாது பாருங்கோ...

தாண்டிக்குளம் படையினர் 2 பற்றரிகளுக்கே அனுமதி

பயணிகள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், செப். 19

வடபகுதிக்கு மின்கலங்களைக் (பற்றரிகளைக்) கொண்டு வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோதிலும் —

தாண்டிக்குளத்தில் பணிபுரியும் படையினர் பற்றரிகளைக் கொண்டுவர அனுமதி மறுப்பதாக —

கொழும்பில் இருந்து வந்த பயணிகள் பலரும் உதயனுக்குத் தெரிவித்தனர்.

மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான பற்றரிகள் எதையும் எடுத்துவருவதற்கு தாண்டிக்குளம் சோதனை முகாம் படையினர் அனுமதிக்கவில்லை. "ரோர்ச்" பற்றரி மட்டுமே எடுத்து வர அனுமதிக்கின்றனர். அதனையும் கூட ஒருவர் இரண்டு மட்டுமே கொண்டு வரலாம் என்று படையினர் தடை போடுகின்றனர்.

மூன்று பற்றரிகள் கொண்டு வந்த பயணி ஒருவரிடம் ஒன்றைப் படையினர் பறித்து விட்டனர்.

"பென்ரோச்" பற்றரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

முன்னாள் அரசியல்வாதிகளான பல இலங்கைத் தூதர்களுக்கு ஒரு வரிக் கடிதத்தில் 'கலதா'!

கொழும்பு, செப். 19

கடந்த ஐ.தே.க அரசினால் வெளிநாடுகளில் இலங்கையின் தூதர்களாக நியமிக்கப்பட்டுள்ள — ராஜதந்திர சேவையில் இல்லாத — அரசியல்வாதிகள் மற்றும் ஒய்வுபெற்ற அரச அதிகாரிகளை 31-10-94 உடன் திருப்பி அழைக்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள டெலக்ஸ் செய்தியில் "உங்களின் நியமன ஒப்பந்தம் 31 - 10 - 94 உடன் ரத்துச் செய்யப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

ஆட்சி மாற்றம் காரணமாக தங்களது சேவை இனித் தேவையில்லை என்று நகுதாக கடிதமூலம் இவர்களுக்கு அறிவிக்க போதுமான காலவசதி இருந்தும், வெளியுறவு அமைச்சு "ஒரு வரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு, முனையில் இருமோதல் சம்பவங்களில் 11 வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 19

கடந்த வியாழனன்று மட்டக்களப்பு மாவட்டத்திக் இராணுவத்தினருடன் இடம் பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் எட்டுப்பேரும், ஆதரவாளர்கள் இருவருமாக 10 பேர் வீரச்சாவடைந்தனர்.

மாவடி முன்மாரி பிரதேசத்திக் உள்ள நெடுஞ்சேனைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை கற்றி வளைத்த இராணுவத்தினர் அதும் தாக்குதலை நடத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

பெரும் நடவடிக்கை ஒன்றுக்கு இராணுவம் தயாராகின்றது?

சிங்கள நாளிதழ் செய்தி

கொழும்பு, செப். 19

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக மிகப்பெரிய அளவு தாக்குதல்களை இரண்டாவது ஆரம்பிக்கப்போவதாக உயர்நிலை இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக "தினமின" சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு பகுதிகளிலேயே இந்த இராணுவத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் —

இத்தாக்குதல்களை மேற்கொள்வதற்கான படையணிகளும், உதவி வழங்கும் படையணிகளும் வடக்கு - கிழக்குக்கு அனுப்பப்படுவதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் விருப்பம் தெரிவித்துள்ளதே என செய்தியாளர் குறிப்பிட்டபோது "பேச்சுவார்த்தை நடத்துவது அரசியலமைப்பு வேலையாகும். பாதுகாப்புப் படையினர் தங்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

தாக்குதல் நடத்தும் திட்டம் இல்லைன அனுருத்தமறுப்பு

கொழும்பு, செப். 19

வடபகுதிப் போர் முனைகளில் ஆண்மைகளைகளில் இராணுவத் தாக்குதல்களை நடத்த அரசாங்கம் திட்டமிடவில்லை என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் லேனா அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்திவரும் உத்தேச சமாதானப் பேச்சுவார்த்தை ஒருபுறமிருக்க விடுதலைப்புலிகளுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்த இராணுவம் திட்டமிட்டு வருவதாக வெளியாகியுள்ள செய்திகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில் பிரதி அமைச்சர் லேனா அனுருத்த ரத்வத்த முன்னுண்டவாறு தெரிவித்தார்.

"இச்செய்திகளில் உண்மையில்லை. இச்செய்திகளை வாசித்த நான் ஆச்சரியமடைந்தேன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

படையினர் நடமாட்டத்தை கட்டுப்படுத்த மாட்டோம்

அமைச்சர் அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு, செப். 19

ஆயுதப்படையினரின் நடமாட்டங்களை நாம் கட்டுப்படுத்தமாட்டோம்.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் லேனா அனுருத்த ரத்வத்த முன்னுண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் ஆயுதப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தற்போது இடம்பெறும் சிறு மோதல்கள் பற்றி கருத்து வெளியிட்டபோது அவர் முன்னுண்டவாறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுக்கு வரவேண்டும்

ருஷியா உலக சமாதான மாநாடு தீர்மானம்

ருஷியா, செப். 19

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும்படி ருஷிய பாராளுமன்ற நாடாளுமன்ற உலக சமாதான மாநாடு பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

18 நாடுகளைச் சேர்ந்த 86 கலந்துகொண்டனர் மற்றும் பிரமுகர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

வளர்முக நாடுகளின் அரசியல் மாற்ற அமைப்புகளின் ஒன்றியம் [Eltaller] ருஷியாவில் கடந்த மாதம் 3 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இந்த மாநாட்டை நடத்தியது.

ஆப்கானிஸ்தான், பொஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பலாலி முகாமுக்கு மேலாக பறந்து சென்ற மர்ம விமானம்

விசாரணை நடத்த உத்தரவு

கொழும்பு, செப் 19

பலாலி கூட்டுப்படைத் தளத்துக்கு மேலாகக் கடந்த புதனன்று பறந்த மர்ம விமானம் பற்றி விசாரணை மேற்கொள்ளுமாறு விமானப்படை அதிகாரிகள் உத்தரவிட்டிருப்பதாக "தினமின" நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பலாலி கூட்டுப்படைத் தளத்துக்கு மேலாக கடந்த 14 ஆம் திகதி இந்த மர்ம விமானம் வடக்கு நோக்கிப் பறந்தது பலாலி விமான நிலையத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையின் அனுமதியோ தகவலோ பறந்து சென்ற அந்த விமானத்தின் மீது சந்தேகம் கொண்ட விமானப் படை அதிகாரிகள் அதனுடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

4 ஆவது நாளாக தொடர்ந்து திலீபனுக்கு மக்கள் அஞ்சலி

உண்ணாவிரத நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையானோர்

யாழ்ப்பாணம், செப் 19

தியாகி திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவு நாட்களை ஒட்டிய நிகழ்வுகள் குடாநாட்டில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நினைவுப் பந்தல்களில் தினமும் நடைபெற்று வரும் உண்ணாவிரத நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் உணர்வு பூர்வமாகப் பங்குபற்றி வருகின்றனர்.

நேற்று நடந்த நடைபவனி உண்ணாவிரத நிகழ்வில் அரியாலை மற்றும் கொக்குவில், அரியகுளம் பகுதிகளைச் சேர்ந்த சனசமூக நிலையங்களைச் சேர்ந்தவர்களும், அரிய கலை பகுதி வர்த்தகர்களும் கலந்து கொண்டனர்.

வடமராட்சி, தென்மராட்சி கோட்டப் பகுதிகளிலும் உண்ணாவிரத நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

மக்கள் தமது வீடுகளுக்கு முன்பாகவும் மற்றும் பொது இடங்களிலும் பல்வேறு பந்தல்களை அமைத்து தியாகியின் உருவப்படங்களை வைத்து மலரஞ்சலி செலுத்திவருவதை காணமுடிகிறது.

வழமைபோல் உண்ணாவிரத நிகழ்வுகள் நடைபெறும் நினைவுப் பந்தல்களில் நேற்றிரவு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தினமும் இரவு 7.30 மணிக்கு இவ்வாறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

ஊர்தி பவனி

யாழ் கோட்டையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டில் இயல்பு நிலை உருவாக்க நேரில் செல்ல அமைச்சர்களுக்கு பணிப்பு

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாண மாவட்டத்திக் இயல்புநிலை திரும்புவதற்கான அலுவல்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு பிரதமர் சந்திரிகா சம்பந்தப்பட்ட அமைச்சர்களைப் பணித்திருக்கிறார்.

குடாநாட்டில் நிலவும் கஷ்டங்கள், வசதியீனங்களை நேரிக் அறிந்து அவற்றை நிவிர்த்தி செய்யவேண்டும் என்று கருதினால் —

கலம் தாழ்த்தாது அங்கு சென்று உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் — பிரதமர் அமைச்சர்களைக் கேட்டுள்ளார்.

பிரதமரின் இந்த வேண்டுகோளை தொடர்ந்து தாரத்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் ஜனாப் ஏ. எச். எம். பௌசி மற்றும் —

நபால், தொலைத்தொடர்பு அமைச்சர் ஜி. ஏ. சந்திரசிறி, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ஆனந்த குமாரசிறி, — இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

மூன்று பரப்புக் காணி புடன் வீடு விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்: ந. அருளாசலம், நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (32933)

எல்லா வகையான Prima கொழித்தீன்கள் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [32912]

இன்டரகொம் [Intercome] பிரேயிங்சார் 3 K.V. 250W பற்றறி சார்ஜர் (20V 2A 75W, CCTV Lens (நாஷனல் வீடியோ கமராவுக்கு உரியது) சாம்சியா மெயின் ரோட் செல்லர், பருத்தித்துறை வீதி, கல்விளங்காடு. (32950)

பிரிமா புறொயிலர் குஞ்சுகள் ஆறு நாட்கள் நன்கு பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டவை விற்பனைக்குண்டு. கொழிக்குஞ்சுகள் ஒ–ருக்கு எடுத்துச்செல்லக்கூடியது. தொடர்பு: கி. குகசிங்கம், இல. 9, நல்லை வீதி (Bar க்கு முன்பாக), யாழ்ப்பாணம். [32948]

கன்னாகம் சந்நிதியோடு வீதியில் [ஐயனார் சனசமூகம் நிலையம் முன்பாக] வீடும் வளவும் [நெல்பரப்பு 3] விற்பனைக்குண்டு. தகவல்: இ. குணம், 43, மார்க்கட், கன்னாகம். [7645]

புறொயிலர் விற்பனைக்கு

Broiler இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. சத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 392, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (பஸ்நிலைச் சந்தி) [32917]

சிறுகதைகள்

வெள்ளிப்பாதரசம், இந்த நூற்றாண்டின் ஈழத்து சிறுகதை முதல் தொகுதி. ஒரு கூடை கொழுந்து இந்த நூற்றாண்டின் ஈழத்து சிறுகதை இரண்டாம் தொகுதி செ. யோகநாதன். விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-9159]

உயர்தரக் கணக்கியல்

ஆக்கம் வி. சுந்தரேசன், அரச வரவு செலவுத்திட்டம் வே. சண்முகராஜா BBA. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-9153]

ஆண்டு 3, 4

18 – 9 – 94 ஞாயிறு வெளிவிடப்பட்ட பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப்பரீட்சை வினாத்தாள்களையும் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) ஆண்டு 3 புலமைப் பரிசில் [1996] மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. [32945]

பூச்சிக்கொல்லி

பூச்சிக்கொல்லி [இன்செக்டிஸ்ட்] மலத்தீவிலும் சிறந்தது. கறையான், எறும்பு, கொறவன் போன்ற சகல பூச்சிகளையும் கட்டுப்படுத்த சிறந்தது. 1 லீட்டர் ரூபா 20. எங்கும் கிடைக்கும். [சி-9148]

பாடசாலை உபகரணம்

பாடசாலை உபகரணங்கள், கொப்பி, ஒயில் பேப்பர், கிறப் பேப்பர்கள் மலிவாகப் பெற கண்ணன் கிறை, மக்கள் வங்கி முன்பாக, விறாண்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-9149]

மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லண்டனில் நிறுவனமொன்றில் பணியாற்றும் 28 வயது, புனர்பூசம் அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. லண்டனில் உயர்கல்வி விரும்பத்தக்கது. இல. 693, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [32940]

மணமகள் தேவை

யாழ் பாணத்தைச் சேர்ந்த லண்டனில் குடியுரிமைபெற்ற தொழில் நுட்பவியலாளர், வயது 30, உத்திராடம், செவ்வாய் எட்டு. மணமகளுக்கு பெண் தேவை. இல. 692, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [32939]

சொற்பொழிவு

சந்நிதிமடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம், வேதாந்த மடத்தில் ஒவ்வொரு சனி, ஞாயிறு திங்கள்களிலும், மாலை 6 மணி தொடக்கம் 8 மணிவரை வேலணை-தரணவாய் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சை. திருஞானசம்பந்தக் குருக்கள் "சாந்திரமும்–தோத்திரமும்" என்ற பொருளில் தொடர் சொற்பொழிவாற்றுவார். (அ)

நிவாரணத்துக்கு பழுதடைந்த தேயிலை

யாழ்ப்பாணம், செப். 19 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான இலவச உலர் உணவு நிவாரணத்துக்கு பழுதடைந்த தேயிலை விநியோகிக்கப்பட்டுவருவதாக பொதுமக்கள் பலரும் புகார் தெரிவித்துள்ளனர்.

பல தடவைகள் இவ்வாறு பழுதடைந்த தேயிலை விநியோகிக்கப்பட்டதால் மக்கள் ப. நோ. கூ. சங்கங்களில் இருந்து அதனை பெற்றுக் கொள்வதை நிறுத்தி விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது [ஐ-4]

மல்லாகம்

பெரியதம்பிரான் தேவஸ்தானம் 15 ஆம் நாள் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

காலம்: **19 - 09 - 94** திங்கள்

நிகழ்ச்சிகள்

காலை: 8-00மணி சங்குபூசை, விசேட ஹோமம்
பகல்; 11-00மணி சங்காபிஷேகம் [108]
பகல்: 12-00மணி பூசை
பகல்: 12-30மணி அன்னதானம்
இரவு: 7-00மணி சிறப்புச் சொற்பொழிவு
கம்பவாரிதி
திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
விடயம்
"அன்பே சிவம்"
மங்கள இசை
திரு. நம்பிராசா குழுவினர் மல்லாகம்
திரு. சிவகுமார் குழுவினர் சுழிபுரம்
இரவு: 8-30மணி திருஞ்சக்
இரவு: 10-30மணி
'வில் லிசை'
'கலைநேசன்'
சின்னமணி குழுவினர்

ஒலி: றோயல் சவுண்ட், கீரிமலை.
ஒளி; மகாமாரி லைற், சுன்னாகம்,
பூந்தண்டிகை செ, கந்தையா, மாவிட்டபுரம்

அடியார்கள் அனைவரும் கலந்து அருள்பெற்றுய்யவும்!

வ. அப்புத்துரை (பெரியதம்பி)
பூசகர்
மல்லாகம். (32946)

பருத்தித்துறை

ஐக்கிய விளையாட்டுக்கழக 34 ஆவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

காலம்: 30–09–1994 வெள்ளி
01. 02. 03 — 10 – 1994
சனி. ஞாயிறு. திங்கள்
இடம்: கழக மைதானம் (தீக்கமுனை)

நடைபெற இருக்கும் போட்டிகள்

- 10 மைல் மரதன்
- 2 மைல் நடைப் போட்டி
- வெளிக்கழகங்களுக்கிடையிலான அஞ்சல் ஓட்டம்
- கிறீஸ் கம்பம் ஏறுதல்
- கழகங்களுக்கிடையிலான கயிறுஇழுத்தல்
- மல்யுத்தம்
- குத்துச்சண்டை (சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்)

போட்டிகள் யாழ் மாவட்ட ரீதியில் இடம்பெறும்.

விண்ணப்ப முடிவு திகதி 25—09—1994

விழாவை சிறப்பிக்க நாடகப் போட்டியும் இடம்பெறும்

★ நாடகப் போட்டியின் நன்மைகள்

நாட்டுக்கூத்து	காத்தான்கூத்து
இசை நாடகம்	நவீன நாடகம்
வசன நாடகம்	சிறுவர் நாடகம்

[நாடக போட்டிகள் வடமராட்சிப் பிரிவுக்குட்பட்ட (நாடகர்கள்) மன்றங்கள் மட்டும் உட்படுத்தப்பட்டது]

விண்ணப்ப முடிவு திகதி: 20 09 1994

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
ராஜன் சைக்கிள் வேக்ஸ்,
பருத்தித்துறை.

செயலாளர்
ஐக்கிய விளையாட்டுக்கழகம்
பருத்தித்துறை.

(சி-9150)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வேலும்மயிலும் வெற்றிவேலு

இரண்டாண்டு கழன்றாலும் மனச் சுமைகள் மாறாது
உங்கள் முகம் காணாது எம் ஏக்கம் மாறாது
உங்கள் நிழல் தொடர எமது பணி மாறாது
கண் கண்ட தெய்வமாய் காத்திடவே –
இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயிலும்:
மனைவி, பிள்ளைகள்

நல்லூர். (சி/9187)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 22 — 10 — 1939
மறைவு: 20 — 08 — 1994

அமரர் சிவகுரு விசாகமூர்த்தி

(முன்னாள் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க ஊழியர்)

பாசமாய் எங்களுடன் வாழ்ந்த நீங்கள்
பாதியிலே எம்மை விட்டு பிரிந்தீரே – அப்பா
உங்கள் நினைவால் வாடுகின்றோம் — ஆனாலும்
நீங்கள் எம் நினைவில் என்றும் இருக்கின்றீர்கள்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தொடர்பாக பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கிய தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க தலைவர், ஊழியர்கள், நிதியாளர், ஐக்கிய நாணயச் சங்கத்தவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள்.

இறிஸ்தவ கல்லூரி முன்பாக,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (32949)

வின்னக வாழ்வில் மூன்றாவது ஆண்டுகள்

பிறப்பு: 22 — 06 — 1924
மறைவு: 23 — 09 — 1991

அமரர் S. R. பொன்னம்பலம்

(வேலிலாக்கண்டி
(ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்)

திதி: 19 — 09 — 1994

நல்ல சான்றாய், அதிபராய் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்த காலத்தில் – இறைவன் நன்னடிகளுக்கு அழைத்தது ஏனோ – ஐயா!

நங்கள் ஆத்மா சாந்தி அடையப்பிரார்த்திக்கும்!

— மனைவி.

[illegible] வீதி,
யாழ்ப்பாணம். (32900)

யாழ். இந்துக் கல்லூரி விஞ்ஞானமன்றம் விஞ்ஞானப் பொது அறிவுப் போட்டி

பல பாடசாலைகளின் வேண்டுதலுக்கு அமைய விஞ்ஞானப் பொது அறிவுப் போட்டி 23-09-94 வெள்ளிக்கிழமை பிற்பகல் நடாத்தப்பட்டுள்ளது. விண்ணப்பம் புதன்கிழமை 21-09-94 வரை ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்களை அனுப்பிய, அனுப்புகின்ற பாடசாலைகளுக்கு அனுமதி அட்டை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

–விஞ்ஞானமன்றம்.
யாழ். இந்துக்கல்லூரி. (சி-9202)

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலாநாள் அறிவியலரங்கு

காலம்: **19 - 09 - 1994** ஆம் திகதி
பிற்பகல் 3-00 மணி

இடம்: பிரார்த்தனை மண்டபம்

கருத்துரை I
வீரசைவம் - ஓர் அறிமுகம்
வழங்குபவர்:
திரு. ம. வேதநாதன்
கிறிஸ்ட் விரிவுரையாளர், இந்துநாகரிகத் துறை யாழ். பல்கலைக்கழகம்

கருத்துரை II
இலங்கையில் பாடசாலை அமைப்பு முறை 21ஆம் நூற்றாண்டின் திர்பார்ப்புக்களும் அறைகூவல்களும்
வழங்குபவர்:
திரு. மா. சி[illegible]னத்தம்பி
விரிவுரையாளர், கல்வியியற்துறை
யாழ். பல்கலைக்கழகம்

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்

செயலாளர்,
யா. இ. க. ப. மா. ச.

(சி-9144)

கண்ணீர் அஞ்சலி

சொந்த மண்ணுக்கும் தன் மக்களுக்கும் 18 வருடங்கள் தன்னை அர்ப்பணித்து நெருக்கடியான காலங்களிலும் இரவு பகலாக தன் நேரத்தையும் சேவையையும் நந்த உதவிய

சத்திர சிகிச்சை நிபுணர்
டாக்டர்
சுப்பிரமணியம் பொன்னம்பலம்
அவர்களின்

ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொண்டு,

அவர் மனைவி, பிள்ளைகளுக்கும், யாழ். போதனா வைத்தியசாலை சக ஊழியர்களுக்கும் எங்கள் அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

அதிபர், ஊழியர்கள்,
கிறீன் ஞாபக வைத்தியசாலை,
நாவிப்பாய்.

[சி-9201]

கண்ணீர் அஞ்சலி

வைத்திய உலகில் தன்னலமற்று எம் மண்ணிலிருந்த எமது மக்களுக்காக தொண்டாற்றி

அமரரான வைத்திய நிபுணர்
சுப்பிரமணியம் பொன்னம்பலம்
அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகஸ்தர்களும்,
ஊழியர்களும்,
செஞ்சிறுவர் நர்சிங் ஹோம்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். [32951]

கண்ணீர் அஞ்சலி

யாழ். அரசினர் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணராகக் கடமையாற்றி, எம்மவர்களாகிய ஆறாத துயரில் ஆழ்த்தி, அமரராகிவிட்ட வைத்திய கலாநிதி

டாக்டர்
சுப்பிரமணியம் பொன்னம்பலம்
அவர்களின்

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், மாணவிகள்,
தாதிகள் பயிற்சிக் கல்லூரி,
10/5 வெலிங்டன் வீதி,
திருநெல்வேலி, (32953)

கலை, வர்த்தக கல்லூரி

C. C. A.

மணிக்கூட்டுவீதி
யாழ்ப்பாணம்.

A/L 94

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான பகல் நேர வகுப்புக்கள் (Day Class)

புதிய பிரிவு ஆரம்பம்.
29 - 09 - 1994
காலை 8 மணிக்கு

எமது வழமையான ஆசிரியர் குழு

குறிப்பு:
மாணவர்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

– நிர்வாகி

(சி-9179)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

ஜனாதிபதி தேர்தல்

ஜனாதிபதி தேர்தல் குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளிவந்து விட்டது. தேர்தல் ஆணையாளரின் பிரடனத்தில் பிரகாரம் புதிய நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நவம்பர் மாதம் ஒன்பதாம் திகதி நடைபெற உள்ளது. வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்கள் எடுத்த மாதம் — ஒக்டோபர் மாதம் — ஏழாம் திகதி தாக்கல் செய்யப்படும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையில், கீழ் ஒரு தனி நபரிடம் அதிகாரம் அளவுக்கு அதிகமாகக் குவிக்கப்பட்டிருக்கிறது. மனிதனைப் பாரம் மாற்றம் செய்யக்கூடிய வகையில் அரசியல் சாசனங்களையும் வழங்கும் விதத்தில் அதிகாரங்கள் குவித்திருப்பதாகச் சிலர் விமர்சனம் கூறப்படுவதுண்டு. ஆனால் அவர் மக்களுக்கு, மக்களின் பிரதிநிதிகள் சபையான நாடாளுமன்றத்துக்கு பதில் சொல்லவேண்டிய பொறுப்பில்லை.

இந்தவித அதிகாரக் குவிப்பு தவிர்க்கப்பட்டிருக்கிறது. மொசடி, பழிவாங்கல் என்ற அணுகுமுறைகள் பொருந்திய சர்வாதிகாரத்துக்கு வழிவகுக்கிறது. கடந்த பதினேழு வருட நிறைவேற்று ஜனாதிபதி முறை ஆட்சி, இதனைச் சரித்தரத்துக்கு இடமின்றி நிரூபித்து விட்டது!

அதன் காரணமாக, நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்ற குரல் ஒலிக்கத் தொடங்கியது. நிறைவேற்று ஜனாதிபதியின் கிருஷ்ண சர்த்தாவான ஜே. ஆர். செல்லப்பிள்ளையாரை விளங்கிய லலித் அத்துலத் முதலியும், காமினி திஸநாயக்காவுமே அந்தக் குரலை வெளிப்படையாக முதலில் வைத்த ஒலித்தவர்கள்.

அவர்களில் ஒருவரான காமினி திஸநாயக்கா இப் போதைய ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிற்கப்போவதாக அரங்கம் அரங்கில் வழமையான தடம் மாறல்களில் ஒன்று.

காமினி மட்டுமன்றி நிறைவேற்று ஜனாதிபதி முறை, நமக்கும் இந்த நாட்டுக்கும் "தெய்வத்துப் பசை" "எடிபாப் பொருத்தம்" என்று கூறிவந்த சந்திரிகா பண்டாரநாயக்காவும் ஜனாதிபதி வேட்பாளராக நிற்கப்போகிறார்!

நாம் பதவிக்கு வந்தால், நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்போவதாகக் கூறிய அவர், பொதுத் தேர்தல் முடிவுகளைக் "கைப் பற்றப்பட்ட" நிலையில்—பலவீனமான நிலையில்— முந்திய நிலைப்பாட்டை மாற்றித் தமது அரசியல் பலவீனத்தைக் காட்டி நிற்கிறார்!

முன்னர் உறுதி அளித்தவைகளை இணங்க, தெரிவு செய்ததன் மக்களிடம் பொதுத் தேர்தலில் பெற்ற ஆணைக்கு இணங்க நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க முடியாவகையில் அரசுக்கு நாடாளுமன்ற பலம் போதாது என்ற சந்திரிகாவின் அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கூறியதோடு மும்—

அந்த நாடாளுமன்ற பலத்தை தமது ஆட்சியையும், செயற்பாட்டையும் பாதித்து விடக் கூடாது என்பதற்காக தமது நிலையைப் பலப்படுத்தவே, விரிப்படுத்தவே நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்காமல் அந்தப் பதவிக்கே சந்திரிகா போட்டியிடுகிறார்.

எப்படியோ, ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கவே வெல்வதற்கான சகல வாய்ப்புகளும் உண்டு. எதிர்வரும் 8 வாரங்களிலும் முந்திய ஆட்சியின் சீர்கேடுகளை அம்பலப்படுத்த நினைக்க மக்களின் வாக்குகள் குவியும்!

தொண்டமானின் இ. தொ. கா.வும் சந்திரிகாவை ஆதரிக்குமாயின் அவர் ஆமோக வெற்றியீட்டும் வாய்ப்பு உண்டு. வடக்கு வாக்குகள் மீதும் "கண் வைத்தவராகவும்" அவரும் கிடைக்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து பொதுத் தேர்தல் ஒன்று நடக்கும் சாத்தியம் உண்டு என்று பேசப்படுவதாகும். சந்திரிகா ஜனாதிபதி தேர்தலில் வென்றால் ஒரு வருடத்துக்கு மேலும் நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடரும் என்று நம்பலாம்; அரசமைப்புத் திருத்தத்துக்கு தெரிவுக்குழு நியமிக்கப்பட்டிருப்பது அதற்கான சமிக்ஞையே!

வடக்கு- கிழக்கு யுத்தம் நின்றவுடன்

தொழில் பறிபோய்விடுமே என்று படையினர் அஞ்சத்தேவையில்லை

பாதுகாப்பு பிரதி அமைச்சர் உறுதிமொழி

கொழும்பு, செப். 19

வடக்கு — கிழக்கு யுத்தம் நின்றால் வேலை பறிபோய் விடுமே என்று முப்படைகளிலும், பொலீஸிலும் உள்ள தொண்டர் படையினர் அச்சப்படத் தேவையில்லை என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை உறுதியளித்திருக்கிறார்.

யுத்தத்துக்கு அரசியல் தீர்வு காணப்படுவதுடன், போர்முனைகளில் இருந்து வெளியேறும் படையினருக்கு தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும் என்றும் —

அதனைப் பயன்படுத்தி அவர்கள் லாபகரமான தொழில் வாய்ப்பை பெற முடியும் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

கடந்தவார இறுதியில் மணலாறு மற்றும் மன்னார்—தள்ளாடி இராணுவ முகாம்களில் நிலைகொண்டுள்ள படையினர் மத்தியில் பேசுகையில் அவர் முன்வைத்த உறுதிமொழிகளை வழங்கினார்.

"ஆயுத யுத்தத்துக்குப் பதிலாக அரசியலுக்கு யுத்தம் நடத்தப் போகின்றோம். அதில் முப்படைகளின் கொண்டர் அணியினர் ஈடுபடுத்தப் படுவர்; எனவே யுத்தம் நின்றால் வேலை பறிபோய்விடுமே என்று கவலைப்பட தேவையில்லை. நாட்டிற்காகப் போராடிய படையினரை நடுத்தெருவில் நாங்கள் விட மாட்டோம்" — என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை;

பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என வேட்கப்பட்டது.

சமாதானம் முதலாவது கட்ட நடவடிக்கையாகும். இதில் இரண்டாம் கட்ட நிலையும் இல்லாமல் இல்லை. அப்படி ஒரு நிலை ஏற்படுமானால் நாம் நம்புகின்றோம்.

அப்படி ஒரு நிலை ஏற்படுமானால் கொழும்பிற்குள் ஒரு மூடப்பட்ட அறையில் இருந்து கொண்டு நான் உத்தரவுகளைப் பிறப்பிக்கமாட்டேன். உங்களுடன் போர் முனையில் முன்னின்று கொண்டே உத்தரவுகளைப் பிறப்பிப்பேன் — என்று பிரதி அமைச்சர் கூறினார். (எ)

இவ்வாண்டின் இறுதியில் இராணுவக் கட்டமைப்பில் முக்கிய மாற்றங்கள் வரும்

67 அதிகாரிகள் விலகுவதன் விளைவு

கொழும்பு, செப். 19

ஓய்வு பெற்ற பின்னரும் ஒப்பந்த அடிப்படையில் இராணுவத்தில் தற்போது பணிபுரிந்து வரும் 67 உயர் அதிகாரிகளும் பதவி விலகிய பின்னர் இராணுவத்தில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளப்படக் கிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசு வட்டாரம் ஒன்றை மேற்கோள் காட்டி தமிழ்நாட்டு நாளிதழ் இச்செய்தியை வெளியிட்டது.

சேவை நீடிப்பில் உள்ள இந்த அதிகாரிகள் அனைவரும் இவ்வாண்டின் இறுதிக்குள் பதவிவிலகும் படி அரசினால் கேட்டுக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வு இரண்டு மேஜர் ஜெனரல்கள், ஒன்பது பிரிகேடியர்கள், இரண்டு கேணல்கள் ஆகியோர் இந்த 67 அதிகாரிகளில் அடங்குகின்றனர். (எ)

6 டி. ஐ. ஜிக்கள் உட்பட 14 பொலீஸ் அதிகாரிகள் பதவி விலக அரசு உத்தரவு

தெகு பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள், கிரேஷ்ட பொலீஸ் அதிபர் ஒருவர் உட்பட பதினொரு பொலீஸ் அதிகாரிகள் இம்மாத இறுதியில் ஓய்வுபெறவுள்ளனர்.

சிரேஷ்ட அரசு வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

பிரதி பொலீஸ் மா அதிபர்களான அமரசேன ராஜபக்ஷ, சந்திரா மெண்டிஸ், ஆர். ஏ. டி. எம். வீரசேகரா, டி. என். சிறிவர்த்தனா, எம். டி. பெரேரா, யட்டியமன, சிரேஷ்ட பொலீஸ் அதிபர் கமித் சில்வா மற்றும் 4 பொலீஸ் இன்ஸ்பெக்டர்களுமே பதவி விலகுகின்றனர்.

இவர்கள் அனைவரும் ஓய்வுபெற்ற பின்னர் ஒப்பந்த அடிப்படையில் பொலீஸ் நிலையங்களில் இதுவரை பணியாற்றி வந்தனர்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களை சேவையில் வைத்திருப்பதில்லை என்ற அரசின் முடிவுக்கு இணங்க இவர்கள் பதவி விலகும்படி அரசினால் கோரப்பட்டுள்ளனர். (எ)

நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் 2 ஒழுங்கு செய்துள்ள கனகேசரி ஆ. தம்பிதுரை நினைவஞ்சலிக் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

வலயம் 2 இன் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் செந்தமிழ்ச் செல்வி தங்கமாதாப்பாக்குட்டி உடுவில் பிரதேச செயலர் திரு ஆ. மகாலிங்கம், கனகேசரசு திரு. ஏ. ரி. பென்னுத்துரை முதலியோர் அஞ்சலி உரை நிகழ்த்துவார்கள். (எ)

ஆணைக்குழுக்களை நியமிக்க பிரதமருக்கும் அதிகாரம்

அமைச்சரவை இவ்வாரம் வழங்கும்

கொழும்பு, செப். 19

விசாரணை ஆணைக்குழுக்களை அமைக்கும் அதிகாரத்தை பிரதமருக்கும் வழங்குவது தொடர்பான முடிவு அடுத்தவாரம் இடம் பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளது.

ஆணைக்குழுக்களை அமைக்கும் அதிகாரம் நிறைவேற்று ஜனாதிபதிக்கு உரியதாயினும், அதே வகையில் பிரதமருக்கும் அந்த அதிகாரத்தை வழங்கு வதற்கு அமைச்சரவை முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

1988ஆம் ஆண்டு ஜனவரி முதல் நிதி தொடக்கம் இடம்பெற்ற அரசியல் கொலைகள், ஆட்கடத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக ஆணைக்குழு நியமித்து விசாரணை செய்வதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

பிரதமருக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டதும் இது தொடர்பாக விசாரணை நடத்தும் ஆணைக்குழுவை அவர் நியமிப்பார் என்றும்—

அதன்பின் ஐ. தே. க. அரசியல்வாதிகள் தொடர்பான பல ரகசியங்கள் வெளியாக வாய்ப்புண்டு என்றும் 'ராவய' பத்திரிகை ஆசிரியர் திரு. விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார். [ஐ-6]

இந்து மத விவகாரத்துக்கு பிரதி அமைச்சர் இனி இல்லை

தனியான திணைக்களமாக செயற்படும்

கொழும்பு, செப். 19

இந்த சமய கலாசார விவகாரங்களுக்குப் பொறுப்பாக பிரதி அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட மாட்டார்.

இது போன்று முஸ்லிம் மத விவகாரங்களுக்கும் பிரதி அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட மாட்டார்.

கலாசார, மத விவகார அமைச்சர் கலாநிதி ஜெயக்கொடி இந்தவகை கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

எனினும் - இந்துசமய கலாசார திணைக்களமும், முஸ்லிம் சமய விவகார திணைக்களமும் முன்னர் இயங்கியதைப் போன்று செயற்படுவதற்குப் பூரண சுதந்திரம் வழங்கப்படும் என்று தெரிவித்த அமைச்சர் —

கலாசார, மத விவகார அமைச்சின் இரு பிரிவாகவே இவ் விரு திணைக்களங்களும் செயற்படும் என்றும் தெரிவித்தார்.

ஆனால் இவற்றுக்கு பொறுப்பாக இரு மேலதிக செயலாளர்கள் நியமிக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ. தே. க. ஆட்சியில் இரு சமயங்களுக்கும் என்று தனித் தனி ராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். (எ)

யுத்தத்துக்கு செலவாகும் பணம் இலவச உணவுக்குப் போதும்

றொனி டி. மெல் பேச்சு

கொழும்பு, செப். 19

வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு ஆண்டு தோறும் செலவிடப்படும் 1,ஆயிரத்து 500 கோடி ரூபாவை யாவிடுபடுத்தி நாட்டு மக்கள் அனைவருக்கும் ஆண்டு முழுவதும் இலவசமாக உணவு வழங்க முடியுமாம்.

முன்னாள் நிதி அமைச்சரும் தற்போது மாற்றுக் கொள்கை ஐ.தே.க. எம்.பியுமான திரு. றொனி டி.மெல் முன்னாள் தெரிவித்தார்.

நிட்டம்பியில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசியபோது அவர் இவைகளைத் தெரிவித்தார்;

அவர் மேலும் சொன்னதாவது;

வடக்கு - கிழக்கு யுத்தம் என்ற பேரில் பல் தரகுப் பணம் பெற்று வருகின்றனர். ஆயுதங்கள், டாங்கிகள், ஹெலிகொப்டர்கள், படகுகளுக்கான சீருடைகள் உணவுகள், சப்பாத்துகள்— இவற்றைக் கொள்வனவு செய்வது என்ற பேரில் கொடிக்கணக்கான ரூபா தரகுப்பணம் பெறப்படுகிறது.

விரைவில் இறுதியான தேர்தல் நடைபெறவுள்ளது; இத் தேர்தல் மக்களின் நேரத்தையும் பணத்தையும் விரயம் செய்வதாகும். நிறைவேற்று ஜனாதிபதி முறை இந்த நாட்டிற்கு சாபக்கேடாகும்.

தனிநபர் ஆட்சி, கொலைகள், மனித உரிமை மீறல்கள் என்பன இந்த நாட்டில் இடம் பெறுவதற்கு ஜனாதிபதி ஆட்சி முறையே வழிவகுத்தது. இந்த ஆட்சி முறை அகற்றுவதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாம் இணங்க வேண்டும்.

இவ்வாறு [illegible] தெரிவித்தார். (எ-9)

தியாகி திலீபன் நினைவாக இன்றைய இரவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 19

தியாகி திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவினை ஒட்டி கோப்பாய் தொகுதியான உண்ணாவிரதப் பந்தல்களில் இன்று நடைபெறவுள்ள இரவு நிகழ்வுகளின் விவரம் வருமாறு;

வலிகாமம் கோட்டம்

★ கன்னாகம் வெங்கோயிலடியில்—புன்னாலைகுழந்தைகள், கல்லறையும் கதைசேகம் (நாடகம்), கோணாட்டம்.

★ வடக்கம்பரை அம்மன் கோயிலடியில்—பட்டிமன்றம், பேச்சு, மரணதை வென்றவர்கள் (இசை நாடகம்), கும்மி.

★ ஆனைக்கோட்டை முத்தமிழ்நாயகர் கோயிலடியில்— கவி அரங்கு, ஒன்று பட்டால் உண்டு வாழ்வு (நாடகம்), காவடி.

★ நீர்வேலி கந்தசாமி கோயிலடியில்— பேச்சு, சகுமார் இசைக்குழு, நிலைமை கண் (நாடகம்), நாடிய நாடகம்.

★ நல்லூர் கந்தசாமி கோயிலடியில் இன்னிசைக் கச்சேரி, தொடரும் பயணங்கள் (நாடகம்), கோணாட்டம்.

தீவகக் கோட்டம்

★ அரியாலை நாச்சிமார்—கோயிலடியில்— பேச்சு, விடிவிற்காய் விதைத்தவர்கள் (நாடகம்), கோணாட்டம் கும்மி.

வடமராட்சிக் கோட்டம்

★ உடுப்பிட்டிச் சந்தி வரைவர் கோவிலடியில்— கரகம், காவடி, கிளிஜோ பாட்டு, (சின்னமணி குழு), நாட்டிய நாடகம்.

★ மந்திகை அம்மன் கோயிலடியில்— பேச்சு, பரமமுடிவு (நாடகம்) கோப்பாய் வடக்கம், கிராமிய நடனம்.

★ துன்னாலை கலிகைக் கந்தன் ஆலய முன்றலில்— —பேச்சு, தூரம் அதிமிச்சை (நாடகம்), கிளிஜோபாட்டு.

தென்மராட்சிக் கோட்டம்

★ வைதேச்சந்தி— பேச்சு, ஐயம், கரகம், புயலாய் எழுவோம் (நாடகம்).

★ சாவகச்சேரி மணிகுணாய் பிள்ளையார் கோவிலடியில்— பேச்சு, வயிறுக் காவடி, போராடும் பூமி (நாடகம்), கரகம்.

★ கொடிகாமம் இரட்டைக்கேணி அம்மன் கோவிலடியில்— பேச்சு, கிளிஜோபாட்டு, தாகம் (நாடகம்), கரகம் காவடி.

★ பளை இரட்டைக்கேணி அம்மன் கோவிலடியில்— பேச்சு, எழுச்சிப்பாடல்கள், கைத்திக் மைந்தன் (நாடகம்), கிளிஜோபாட்டு.

(எ)

புதுடில்லி- வெளிநாட்டுத் தூதரக குடியிருப்பு பகுதியில் சிறுவர்களின் சடலங்கள்

புதுடில்லி, செப். 19

புதுடில்லியில் உள்ள வெளிநாட்டு தூதர்களின் உத்தியோக பூர்வ வாசஸ்தலப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த 24 சிறுவர்களின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக அப் பகுதியில் நிலம் தோண்டப்பட்டபோது இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அப் பகுதியில் உள்ள சேரி மக்கள் தமது சிறுவர்களின் பிரேதங்களை இந்தப் பகுதியில் புதைத்துள்ளனர். அந்த சடலங்களே கண்டு பிடிக்கப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஐ 6)

தியாகி திலீபன் நினைவாக இன்று நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வுகள்

தியாகி திலீபன் நினைவாக இன்று திங்கட்கிழமை பல்வேறு வட்டங்களில் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளும் பொது அமைப்புகளும் நிறுவனங்களும் வருமாறு;

பருத்தித்துறையில் மந்திகை அம்மன் கோயிலடி, பொலிகண்டி, நெல்லி பயிற்சி நிலையம்.

கரவெட்டியில் துன்னாலை கலிகைக் கந்தசுவாமி கோயில் மொடேன், வாழ்ரன் கலைவிநிலையங்கள்.

உடுப்பிட்டியில் நாவலடி வைரவர் கோயிலடி, மாவீரர் படிப்பகம், நித்திச.ச.நி, நிழற்றன் ச.ச.நி, கலைவாணி ச.ச.நி,சிறீ அம்பாள் ச.ச.நி, இளையராணன் ஆ.த.க பாடசாலை.

உடுவிலில் அளவெட்டி மகாகாம் ப.நோ.கூ.ச, இணுவில் சிவகாமகந்தரி ச.ச.நி, கலாஜோதி ச.ச.நி, பரமானந்தா ச.ச.நி.

சங்கானையில் சங்கானை ப.நோ.கூ.ச.

சண்டிலிப்பாயில் ஆனைந்து தெ.ப.பொ.கூ.ச.

சோப்பாயில் நீர்வேலி யாத்திரார் இந்துக் கல்லூரி, அந்தியடி சைவப்பிரகாச வித்தியாசாலை, அந்தியடி மெ.மி.ச.த. பாடசாலை, நீர்வேலி கி.ச.த பாடசாலை நீர்வேலி தையல் நிலையம், றெடியானா உயர் வலயம், நீர்வேலி மாதர் சங்கம், நீர்வேலி ச.ச. நிலையங்கள்.

தீவகக் கோட்டத்தில் மண்கும்பான் அரசினர் த.க.பாடசாலை, வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், கரம்பொன் சண்முகநாதன் வித்தியாலயம், சின்னமடு றோ.க.த.பாடசாலை, மண்டைதீவு சாம்சன் குடியிருப்பு.

தென்மராட்சி வைதியிலிருந்து தனங்கிளப்பு ச.ச.நி, றோணேஸ் ச.ச.நி, தும்புத் தொழிற் நிலையம்.

சாவகச்சேரியில் கல்வயல் நுணாவில், மீசாலை ஆறுவழி ஊழியர்கள், ஆசிரியர்கள்.

கொடிகாமத்தில் குடமியன் இளங்கோ, நாவற்காடு புனை வேலி ச.ச.நி, வர்த்தகர் சங்கம்.

பளையில் சமுத்திரன் குடியிருப்பு, செந்தில் நகர், தெ.ப.வ.ஆ.கூ.சங்கம். (எ)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவிகள் இடைநிறுத்தம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அளித்து வந்த சகல நிதி உதவிகளையும் நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இடைநிறுத்தி வைத்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நோர்வேயின் நிதி உதவிகளைப் பயன்படுத்திய விதியாதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஒழுங்கீனங்களின் காரணமாகவே இந்த நிதி உதவி இடைநிறுத்தம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஏழு முதல் எட்டு வளர்ச்சித் திட்டங்களுக்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் உதவி அளித்து வருகிறது.

செலவினங்கள் தொடர்பாக இவ்வாண்டு இறுதிக்குள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் திருப்திகரமான அறிக்கைகளைச் சமர்ப்பித்தால் மட்டுமே நோர்வே தொடர்ந்து உதவும் என்று கொழும்பில் உள்ள நோர்வே செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் லார்ஸ் நேல் தெரிவித்தார். (எ)

அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம் நல்லூர் கல்விக்கோட்டங்களுக்கான அதிபர்களின் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்தான சீ. சீ. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது. சகல அதிபர்களையும் தவறாது சமுகளிக்கும்படி யாழ்ப்பாண/நல்லூர் கல்விக்கோட்டப் பிரதேச கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்; [illegible] தெரிவித்தார். (எ)

உழவும் தொழிலும் உனக்காக
வளமாய்த் தேக்கு வருநீரை

இன்று

யாழ். மேம்படி மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று! (திங்கள்) முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ். தென்னிந்திய திருச்சபையின் ஆயர் அதி. வண. காந்திநி ஜெபரேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

★ ★ ★

யாழ்ப்பாணம், நல்லூர் கலை மன்ற வருடாந்த பாடல் ஒன்று இன்று (திங்கள்) முற்பகல் 9.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், கோட்டங்களில் கலை வளர்ச்சியை பிரத்தியேகமாக யிற்றுவிக்கும் சகல ஆசிரியர்களையும் இதில் கலந்து கொண்டு தமது பதிவை செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மாதாந்த அமர்வு இன்று (திங்கள்) முற்பகல் 10 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

★ ★ ★

நல்லூர் சமூக அறிவியல் ஏட்டின் இரண்டாவது ஆண்டு மலர்வெளியீட்டு விழா இன்று (திங்கள்) பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

★ ★ ★

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படும் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவு தராதரப்பத்திர கனிஷ்ட பிரிவு சான்றிதழ் பயிற்சியின் புதிய பிரிவுக்கான வகுப்புகள் இன்று (திங்கட்கிழமை) ஆரம்பமாகும் என அறிவிக்கப்படுகிறது. [ஐ-4]

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகளின் ஆங்கில உயர்வகுப்புகளை நெறி கொண்ட IV நிறைவு நாள் நிகழ்ச்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறும். புறநிலைப்படிப்புகளின் அதனின் இணைப்பாளர். திரு இரா. சிவச்சந்திரன் இந் நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார். (எ-161)

★ ★ ★

யாழ்ப்பாணம் சந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்தமடம் வியாலன சைவநடத்தும் மாதாந்தச் சொற்பொழிவு இன்றிரவு கிழமை பிற்பகல் 3-30 மணிமுதல் நடைபெறும் 'ஞானத்தின் திருவுரு' என்ற பொருளில் ஸ்ரீஸ்ரீ வை. திருஞானசம்பந்தக்குருக்கள் உரை நிகழ்த்துவார். (எ)

★ ★ ★

கல்லியங்காடு ஞானவாசிக ரோதய சங்கத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு பவள விழா விழாவாக்டு. மெய்வல்லுநர் போட்டி. இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு நிரு. சோ. செகதரமூர்த்தி தலைமையில் சங்கமதானத்தில் நடைபெறும். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பழைய மாணவனும் சத்திர சிகிச்சை நிபுணரும் போராட்ட காலத்தில் தமிழ் மக்களின் உற்ற நண்பனுமாக விருந்த வைத்திய நிபுணர்,

எஸ். பொன்னம்பலம்

அவர்கள் இயற்கை எய்தி செய்திகேட்டு துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவதுடன் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி

பழைய மாணவர் சங்கம்
யாழ், இந்துக்கல்லூரி

[பி/9203]

மரண அறிவித்தல்கள்

சற்குணராஜா கோமகன் [நாதன்]

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகக் கொண்ட சற்குணராஜா கோமகன் வீரமரணமானார். இவர் திரு. இ. சற்குணராஜா [அதிபர் லண் கல்லி நிலையம் சோப்பாய்], திருமதி கமிர்தவல்லி சற்குணராஜா [ஆசிரியை சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்] ஆகியோரின் அன்பு மகனும், கோகிலனின் [மாணவன் யா / சண்டிலிப்பாய் இ. ம. வி] அன்பு அண்ணனும், திருமதி சற்குணம் இராஜா [இணைப்பாறிய ஆசிரியை சோப்பாய்], காலஞ்சென்ற திரு. திருமதி நமசிவாயம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவர்.

இவரது இறுதிக் கிரியைகள் கல்வளை சண்டிலிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இன்று [19 - 9 - 94] காலை 2 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. திருமதி சற்குணராஜா

கல்வளை வீதி,
சண்டிலிப்பாய்.

[32956]

தர்பையா முருகுப்பிள்ளை

இடைக்காடு, அச்சுவேலியைச் சேர்ந்த தம்பையா முருகுப்பிள்ளை 17 - 09 - 1994 இல் காலமானார்.

இவர் செல்லாளைப்பிள்ளையின் அன்புக் கணவரும், இராசேஸ்வரி, யோகேஸ்வரி, ஈஸ்வர தம்பையா (U.K.), நாகேஸ்வரமுத்து, ஈஸ்வரமூர்த்தி (கனடா), தேவிஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிர்மலா (இணைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்), குமாரதாசன் (மருந்தாளர் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை), மகிழவதனி உத்தியோகத்தர், மோகனராணி (கனடா), சிவேந்திரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், சந்திரபாபு, நவரதி (கனடா), யசோதரி, செந்தூரன், தெய்வகுமரி, சுகவருணி, சஞ்சீவன், சயந்தன், சோபியா, அனுஷன் ஆகியோரின் பேரனும், பிரியந்தன், பிரவிந்தன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

இவரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (18 - 09 - 1994) அச்சுவேலியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நாகேஸ்வரமுத்து
(மகன்)

இடைக்காடு,
அச்சுவேலி.

(32944)

சபாபதிப்பிள்ளை காங்கேசு

வேலணை கிழக்கை பிறப்பிடமாகவும், தேவாலய வீதி சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை காங்கேசு அவர்கள் நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமுத்துவின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரி சபாபதி (Norway). சபாநாதன் (காலஞ்சென்ற பொலீஸ் உத்தியோகத்தர்), மாணிக்கநாதம், மாணிக்ருஷ்ணன், சகுந்தலாதேவி, ரூபராணி (Germany), இளங்கோவன் (U.K), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் குணநாயகி (Norway), விமலா, புவனேஸ்வரி, வெனேஸ்வரி, இராசலிங்கம், செல்வநாயகம் Germany), கென்னேதி (U.K), காலஞ்சென்ற நாகராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் சங்கானை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி நா. பரமேஸ்வரி
(மகள்)

தேவாலய வீதி,
சங்கானை.

[32959]

திருமதி கனகம்மா கண்ணுத்துரை

அராலி கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் ஆனைகோட்டையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி கனகம்மா நேற்று சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலம் சென்றவர்களான சரவணமுத்து, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், கண்ணுத்துரையின் அன்பு மனைவியும், திருமதி சந்தானை சுமி, திரு. இயோசேஸ்வரி (ஜேர்மனி), திரு. கணேசலிங்கம் (எரிக்கணேஷ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. திருச்சிற்றம்பலம், திரு. இரட்ணநாதர். (ஜேர்மனி), திருமதி கிருபாநந்தினி, ஆகியோரின் அன்பு மாமியாரும், திருநாந்தினி சபேசன் (கனடா), ரஜனி, கேதீசன், ரமேஷன் (ஜேர்மனி), பிரியங்கா, புரோகோ ஆகியோரின் பாசமிகு பேரனியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமையன்று, அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சோபயனமண்டபம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
எரிக்கணேஷ்
(மகன்)

பொன்னையா லேன்,
ஆனைகோட்டை.

(32961)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெடுக்காக யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 193/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19 09 1994 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

வேங்கைகளின் புகழுடல்கள் இன்று மக்கள் அஞ்சலிக்கு

யாழ்ப்பாணம், செப். 19

வல்வி மாவட்டத்தில் நேற்று முன்தினம் படையினருடன் இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்த வேங்கைகளின்—

8 ஆம் லெப். நாதன் (சற்குணராஜா கோமகன் — சண்டிலிப்பாய்), வீரவேங்கை அரசமணி (இலங்கைநாதன் பார்த்திபன் — கல்லாகம் மேற்கு) ஆகிய இருவரது வித்துடல்களும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அவர்களது இல்லங்களில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கந்தரோடை ஐயனார் சமாதானம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி வணக்கத்துக்காக வைக்கப்படும். வீர வணக்க கூட்டமும் அங்கு இடம்பெறும். பின்னர் புகழுடல்கள் அங்கிருந்து சாவகச்சேரி இராணுவ மரியாதையுடனும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

வீரச்சாவடைந்த 8 ஆம் லெப். நந்தனின் (சாமாதித்தம் கனிதாஸ் — கச்சாய் வீதி, கொடிகாமம்) புகழுடல் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் மக்கள் இறுதி வீர வணக்கத்துக்காக வைக்கப்படும். அங்கு வீர வணக்கக் கூட்டமும் நடைபெறும்.

பின்னர் அங்கிருந்து புகழுடல் சகல இராணுவ மரியாதைகளுடனும் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித புதைகுழியில் விதைக்கப்படும். (ஐ)

4 ஆவது...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாதிரி அமைப்பில் வடிவமைக்கப்பட்ட ஊர்தி ஒன்றில் தியாகி திலீபனின் உருவப் படம் வைக்கப்பட்டு அந்த ஊர்தி நேற்று தென்மராட்சியின் பல பகுதிகள் ஊடாகப் பவனி வந்தது.

ஊர்தி சென்ற பாதைகளில் கூடியிருந்த மக்கள் திலீபனிற் உருவப்படத்துக்கு மரியாதை செலுத்தினர்.

(ஐ 13-15-173-31-155)

புலிகளுடனான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தனது விஜயத்தைத் தாமதப்படுத்தும்படி அரசு தன்னைப் பணித்திருப்பதாகவும் —

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்விமான் ஒருவரிடம் யஸ்க் பேர்னாண்டோ குறிப்பிட்டிருக்கிறார்.

இங்குள்ள நிலைமைகளையும் திரு. யஸ்க் பேர்னாண்டோ ஆத்திக் கல்விமானிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார் என அறியவருகிறது.

யாழ்ப்பாணத்துக்கு தான் புறப்பட்டுச் செல்வதற்கான இறுதி சமிக்ஞையை அரசிடமிருந்து இப்போது எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ப.-3)

பலாலி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்பு கொள்ள முயற்சித்தனர் என்றும் ஆனால் பதில் சமிக்ஞை எதுவும் அந்த விமானத்திலிருந்து கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மர்ம விமானம் குறித்து விசாரணை நடத்தமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

— இவ்வாறு "தினபதி" செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

தாக்குதல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மடைந்தே" — என்றும் அவர் கூறினார்

'இச்செய்திகள் பற்றி நான் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜே. சில்வாவுடன் ஆலோசனை நடத்தினேன். தாக்குதல்களை மேற் கொள்ளும் திட்டம் ஏதும் இராணுவத்திடம் இல்லை என்று தளபதி கூறினார்" — என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இராணுவத்தினதப் பொறுப்பாளரையோ தாக்குதல் நடத்தும் திட்டம் ஏதும் தமது நிர்ப்பந்த அட்டவணையில் இல்லை என்றும் தளபதி ஜெரி டி சில்வா பதிலளித்தார். (எ)

படையினர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்தார்

"இரு தரப்பினருக்கும் இடையே அங்கொன்று இங்கொன்றாக மோதல்களும் உயிரிழப்புகளும் இடம்பெறுகின்றன படையினர் தங்களின் வழமையான கடமைகளைச் செய்து வருகின்றனர். காரணம் இது தொடர்பாக அரசாங்கம் உத்தரவு ஒன்றையும் பிறப்பிக்காதேயாகும். நாம் படையினரின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த மாட்டோம்" — என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (எ)

பெரும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடமையை விட்டுவிட்டு பேச்சுவார்த்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது — என்றும் அந்த அதிகாரி கூறினார்

'அரசு இதுவரை விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவோ, யுத்தம் நிறுத்தம் மேற்கொள்ளவோ இல்லை சண்டையிறுத்தம் பழைய அரசு இன்னமும் எமக்கு உத்தரவிடவில்லை — எனவே நாங்கள் எமது அரசகடமையை செய்கிறோம்" — என்றும் அந்த அதிகாரி கூறினார். (எ-9)

தாண்டிக்குளம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தவிர்ந்த ஏனையவற்றை கொண்டுவர அனுமதி வழங்கப்பட்டதும்—

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுராத ரத்வத்த வவுனியா வந்திருந்தபோது பயணிகள் பற்றாமல் கொண்டு வர நாமே நேரிடுகின்றது வருமதித்ததும் — தெரிந்ததே.

ஆனால் அமைச்சர் கொழும்பு திரும்பியதோடு கதை வேறாகிவிட்டது. தாண்டிக்குளத்தில் படையினர் நாம் ஒரு 'தடை' விதிக்கின்றனர். சாமி விடை கொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்காத நிலையே நிலவுகிறது. இந்த இடையில் நிற்கும் ஆசாமிகளின் தொல்லை நீங்குவது எப்போது? (அ-4)

இந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

44 பொலீஸார், மூன்று விமானப் படையினர், 5 ஊர்காவல் படையினர் மற்றும் ஒரு பொலீஸ் கொமாண்டோ உள்ளனர்.

காயமடைந்தவர்களில் 373 பேர் இராணுவச் சிப்பாய்கள் ஆவர். 66 பொலீஸார், 11 கடற்படையினர், 2 விமானப் படையினர், 2 ஊர்காவல் படையினர் மற்றும் ஒரு பொலீஸ் கொமாண்டோக்களும் காயமடைந்தனர்

6 இராணுவத்தினர், 2 கடற்படையினர், 2 பொலீஸார் மற்றும் 4 ஊர்காவல் படையினர் ஆகியோர் இக் காலத்தில் காணாமற் போயுள்ளனர். (உ-எ)

கடற்படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊடத்தைச் சேர்ந்த செங்கதிர் சாமி வரையழகன் (வயது 27) என்பவர் நீந்திக் கரைசேர்ந்தார். இவர் சுயநினைவை இழந்த நிலையில் குருநகர் கடற்கரையில் கரையொதுங்கியதாக தெரிவிக்கப்பட்டது.

"நோர்வேயர்களின் உதவியுடன் உயிரிழந்த மீனவரின் சடலத்தை மேற்கொண்ட முயற்சியில் மீனவர்கள் நேற்று ஈடுபட்டனர். சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள் பிரஸ்தாப மீனவரின் சடலம் வலையில் சிக்கியது. அதனை மீட்க முற்பட்டபோது அது மீண்டும் கடலில் மூழ்கியதாக தெரிவிக்கப்பட்டது.

மீட்பு பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் சடலம் மீட்கப்படாமல் மாயமாகி விட்டமை. (ஐ-115)

புலிகளின் குரல் வானொலியில்

19 — 09 — 1994

திங்கள் இரவு

★ 8-01 — தியாகதீபம் செய்தியின் பின் திலீபன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி இயல் வாணன் எழுதிய "உன்னதமானவொன்றின் பதிவுகளை மீட்டல்"

★ 8-20 — செய்திச்சாரம்

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — தாரகம்

20 — 09 — 1994

செவ்வாய் காலை

★ 7-02—மாவீர வணக்கம்

★ 7-15 — இன்றைய தாரகை

★ 7-30—செய்திகள்

★ 7-35—பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — தியாகதீபம் செய்தியின் பின் திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — ந.கிருஷ்ணா எழுதிய "தியாகக் கடல்" — விமர்சனம்

இரு மோதல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

படையினருக்கு உதவியாக ஹெலி ஒன்றும் தாக்குதல் நடத்தியது. விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல்களை நடத்தினர். இதனால் படையினர் தரப்பில் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த மோதலிலேயே மோரா வீரர்களும் தரவாளர்களும் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த வேங்கைகளின் விபரம் வருமாறு:-

★ 8 ஆம் லெப் வளவன் [ஸ்ரீஸ்கந்தராஜா ஜெயசீலன்]

★ 2 ஆம் லெப் நவம் [முருகுப்பிள்ளை தங்கத்துரை—மாட்டுக்களப்பு]

★ 2 லெப் இசையாளன் அல்லது ஜங்கரன் [சிவப்பிரகாசம் சந்திரபாபு]

★ 2 ஆம் லெப் விநாசன் அல்லது நளிர் [வரதரட்ணம் றமணன்]

★ 2 ஆம் லெப் கஜவரதன் அல்லது டெல்மன் (வீரக்குட்டி முருகமூர்த்தி)

★ மாவீரன் குமார சாமி பிரமதீசன்]

★ ஈரன் அல்லது பெரியவர் [வைத்திலிங்கம் நவரட்ணம்]

★ தவரதன் அல்லது தவச் செல்வன் [சதிரவேற்பிள்ளை சுவிந்தபபி]

வீரச்சாவடைந்த ஆறாவது வீரர்களின் பெயர்கள் வருமாறு:-

★ வடிவேல் (மட்டக்களப்பு)

★ மோகன் (மட்டக்களப்பு)

★ ★ ★

முல்லை மாவட்டம் நெடுங்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் படையினருடன் இடம்பெற்ற திடீர் மோதலில் சாவடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளான—

★ 2 ஆம் லெப் நந்தன் [சபாரத்தினம் கனிதாஸ் — கச்சாய் வீதி, கொடிகாமம்]

★ 2 ஆம் லெப் நாதன், [சற்குணராசா கோமகன் — சண்டிலிப்பாய்]

★ வீரவேங்கை அரசமணி [அரசமணி இலங்கைநாதன் பார்த்திபன் — கல்லாகம் மேற்கு] ஆகியோர் வீரச்சாவடைந்தனர்

வடக்கு-கிழக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னியா உட்பட உலகின் சண்டை நடைபெறும் நான்கு நாடுகளின் பிரச்சினைகள் குறித்து மாநாட்டில் ஆராயப்பட்டபோதும் இலங்கை இனப்பிரச்சினை பற்றியே முக்கியமாக விவாதிக்கப்பட்டதாக மாநாட்டில் பங்குபற்றிய யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாவிகத்துறை தலைவர் கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரசந்தன் தெரிவித்தார்.

மாநாட்டு முடிவில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாகவே அறிக்கை விடுக்கப்பட்டது.

மனித உரிமைகள் சட்டத்தரணி ஜனாப் ஜாவிட் யூசுப், கிழக்கு மாகாண பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. ஜீவராஜ் தங்கராஜா, சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்த ஜெஹன் பெரேரா ஆகியோரும் இலங்கையில் இருந்து மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாநாட்டு முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் 36 பேரும் கையெழுத்திட்டனர்.

'இலங்கையில் சமாதானத்துக்கான வேண்டுகோள்" என்ற தலைப்பிலான இந்த அறிக்கையில் —

சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான தேசிய மரபியல்ந முயற்சி கிட்டிய நாளில் உறுதிகூறவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ-8)

பனை அபிவிருத்தி சபை தலைமை: நடராஜா அகற்றப்பட்டார்

பதில் தலைவராக எக்நாயக்கா

பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் பதவியில் இருந்த திரு. கே. நடராஜா அகற்றப்பட்டார்.

அவரின் இடத்துக்கு பதில் தலைவராக அனுரா எக்நாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பெருந்தோட்டத்துறை அமைச்சில் உயர் நிலை அதிகாரியாக பணியாற்றி வருகின்றார்.

திரு. நடராஜா கடந்த 15 ஆண்டுகளாக இச்சபையின் தலைவராகப் பணியாற்றி வந்துள்ளார். சபையின் புதிய தலைவர் நியமனத்தை திரு நடராஜா ஊர்ஜிதம் செய்துள்ளார். கொழும்புப் பத்திரிகைகள் செய்தி ஒன்று தெரிவித்தது.

கைதிகள் பற்றி ஆராயும் குழு தடுப்பு முகாம் விஜயம்

கொழும்பு, செப். 19

தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் பற்றி ஆராய்ந்து சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணைக்குழு, வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட நாட்டில் உள்ள சகல தடுப்பு முகாம்களுக்கும் விஜயம் செய்யவுள்ளது.

கடந்த வார இறுதியில் இக் குழு ஞாயிறுவரையில் உள்ள தடுப்பு முகாம்களுக்கு விஜயம் செய்யவிருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

மணலாறில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தங்களை நடத்தினர் என்றும்—

அரசியல் எல்லையோர படை முகாம்களில் இருந்த மணலாறு பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

காணவில்லை

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி கருநாதர்சாமி கோவிலடியில் உள்ள இராசா டீசல் எஞ்சினியரிங் வேலைத் தளத்திற்கு அருகில் உள்ள செவ்வந்தி' வர்த்தக வளாகத்தில் நிற மொமனேயின் நாய்க்குட்டியைக் காணவில்லை. கண்டு பிடித்து தருபவர்களுக்கு சிறந்த சன்மானம் வழங்கப்படும்.

(32957)

BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L கலை, வர்த்தகம்

பகல் நேர வகுப்புகள்

(A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்குரியது)

ஆரம்பம்: 29 - 09 - 1994

வியாழன் 8 - 00 a. m.

★ அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

[B-9162]

மலரும் மலர்கள் வீடியோ சேவை

BLOSSOMS

(புகைப்பட பிடிப்பாளர்கள்)

உங்கள் மங்கள வைபவங்களை சிறந்த முறையில் கொம்பியூட்டர் மிக்சிங் மூலம் வீடியோ பிடித்து தரவும். நிறையாக எடுப்பதும் பிடித்திடவும் இன்றே நாடுங்கள்.

வாடிக்கையாளர்களுக்கு

முக்கிய அறிவித்தல்

இதுவரை எம்மிடம் வாடகைக்குப் பெற்ற வீடியோ நாடாப் பிரதிகளை காலதாமதமின்றி உடனடியாக ஒப்படைக்கவும். ஒரு படத்தைக் தவறிக் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு நாம் பொறுப்பாவிர்கள் அல்ல.

[32955]

வானுறையும் தெய்வத்திற்காய் எஸ் பொன்னம்பலம்

தோயுறிற பேரிலும் - எம்
நோய் தீர்த்த நாலானை - கொடு
நோய் தான் தீர்த்து விட்டதோ!
நேசமுடன் அருளிலிருந்து
நேர்வழி காட்டிய பேராசானே!
ஓட மெடுக்கும்
மந்தனைச் சிற்சி (?) களுடன் இணையாது
ஒப்பரேஷன் தியேட்டரில்
ஓய்வற்று உறங்கமின்றி ஓடித்திரிந்த ஓடதமே!
ஓர் கண ஓய்வாரியுடன் நாம்
ஓய்வெடுக்காது - நீர்
கறுப்பித்த கலையுடனும்
அளித்திட்ட அருளுடனும்
கிடைவெடுக்கும் கிரியை செய்ய
கிரம் கொண்டு
உந்தன் வழியே.....

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்தனைக் கூட்டம் (20-9-94) நாளை காலை 7 மணிக்கு யாழ். மருத்துவ பீடத்தில் நடைபெறும். மருத்துவ ஆசிரியர்கள், மாணவர்கள் தவறாது சமுகம் தரவும்.

மருத்துவ ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

(32953)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org